ஸ்ரீ ராமகிருஷ்ணா மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி **N.** நாரையூர்.

வகுப்பு:10

காலம்:(15 நிமிடங்கள் + 3 நேரம்). தமிழ் மதிப்பெண்: 100

---

பகுதி - I

( மதிப்பெண்:15)

பிரிவு - 1

பலவுள் தெரிக. 15×1=15

1. 'இன்னும் பாப்பத்தே' !- இவ்விதழில் பத்தும் எட்டும் குறிப்பவை

அ) சங்க இலக்கியம் ஆ) அற இலக்கியம் இ) காப்பியங்கள் ஈ) சிற்றிலக்கியங்கள்

2.எந்தமிழ்நா- என்பதை பிரித்தால் இவ்வாறு வரும்.

அ) எந் +தமிழ்+ நா ஆ) எந்த + தமிழ் + நா இ) எம்+ தமிழ்+ நா ஈ) எந்தம்+ தமிழ்+ நா

3. "காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்" நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் குறிப்பிடப்பட்டுள்ள சொல்லுக்கு பொருள்?

அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும். இ) தாளும் ஓலையும்

ஈ) சருகும் சண்டும்

4. இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக்கொண்டவர் .

அ) தமிழழகனார் ஆ) அப்பாத்துரையார் இ) தேவநேய பாவாணர்

ஈ) இரா. இளங்குமரனார்

5. வேர்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை- ஆகியவற்றைக் குறிக்கும்

பயிர் வகை.

அ) குலை வகை ஆ) மணி வகை இ) கொழுந்து வகை ஈ) இலை வகை

6. 'கேட்டவர் மகிழ பாடிய பாடல் இது' -தொடரில் இடம் பெற்றுள்ள தொழிற் பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே .

அ) பாடிய;பாடல் ஆ) பாடல்;பாடிய இ) கேட்டவர்,பாடிய ஈ) பாடல்;கேட்டவர்

7. ஆலும் வேலும் பல்லுக்குறுதி

நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி -இத்தொடர்கள் உணர்த்தும் மரங்களின் பெயர்களையும் தமிழெண்களையும் குறிப்பிடுக.

அ) ஆலமரம், வேப்பமரம்- ரு,க ஆ) ஆலமரம், வேலமரம் -ச, உ

இ) அரசமரம், வேங்கை மரம்-க, உ ஈ) வேப்பமரம் ,ஆலமரம்- ச,சா

8. பாரதியார் காற்றை 'மயலுறுத்து' அழைப்பதைக் குறிக்கும் சொற்றொடர்-

அ) மணம் வீசும் காற்றாய் நீ வா ஆ) மனதை மயங்கச் செய்யும் மணத்தோடு நீ வா

இ) மயிலாடும் காற்றாய் வா ஈ) மகரந்தம் சுமந்து கொண்டு நீ வா

9. அண்ணன் தம்பி வந்தனர்-இத்தொடரில் உள்ள தொகைச் சொல்லின் விரி-

அ) அண்ணனுக்கு தம்பி ஆ) அண்ணனும் தம்பியும்

இ) அண்ணனால் தம்பி ஈ) அண்ணனுடன் தம்பி

10. 'சிவப்புச் சட்டை' பேசினார்- குறியிட்டுள்ள சொல்லுக்கான தொகையின் வகை

எது?

அ) பண்புத்தொகை ஆ)உவமைத்தொகை இ)அன்மொழித் தொகை

ஈ) உம்மைத்தொகை

11. விடுபட்ட உணவுவகைகளை வரிசைப்படுத்துக.

பச்சரிசியை கொண்டு______ செய்து பாசிப்பருப்பினை வறுத்து_____ பிடித்து

கேரட்டைத் துருவி நெய்யிட்டு______ செய்து முடித்த அம்மா,இறுதியாக உருளைக்கிழங்கைச் சீவி______ செய்து அனைவரையும் உணவு உண்ண அழைத்தார்.

அ) பொங்கல், உருண்டை, சீவல் ,அல்வா

ஆ) சீவல், உருண்டை, பொங்கல், அல்வா

இ) பொங்கல் ,உருண்டை, அல்வா ,சீவல்

ஈ) உருண்டை, அவல், அல்வா ,பொங்கல்

பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு(12,13,14,15) விடை தருக.

மகரந்தத் தூளைச் சுமந்து கொண்டு, மனத்தை

மயிலுறுத்துகின்ற இனிய வாசனையுடன் வா;

இலைகளின்மீதும் ,நீரலைகளின்மீதும் உராய்ந்து, மிகுந்த

ப்ராண- ரஸத்தை எங்களுக்குக் கொண்டு கொடு .

12. பிராண ரஸம் -என்றால் என்ன?அ) உயிர் வளிஆ) நறுமணம் இ) சீராக

13. ஆசிரியர் யார்? அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) கவிமணி

14. மயலுறுத்துகின்ற சொல்லின் பொருள்-அ) மயங்கச் செய் ஆ) நறுமணம் இ) அழித்து

15. வாசனை என்பதன் பொருள்-அ) நறுமணம் ஆ) புதுமணம் இ) வருமனம்

## பகுதி-II

( மதிப்பெண்:18)

### பிரிவு-1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.

21 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும். 4×2=8

16. விடைக்கேற்ற வினா அமைக்க:

1. தெலுங்கு ,கன்னடம் முதலியவை திராவிட மொழிகள் ஆகும்.

2. இளங்குமரனார் பாவாணர் நூலகம் ஒன்றை உருவாக்கியுள்ளார்

17."மன்னும் சிலம்பே !மணிமேகலை வடிவே!

முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!"-இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களை தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங்காப்பியங்களை எழுதுக.

18 டாக்டர். கால்டுவெல் தமிழ்மொழியின் சிறப்பைப் பற்றி கூறுவன யாவை?

19. வசன கவிதை- குறிப்பு வரைக.

20. எய்துவர் எய்தாப் பழி- இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது?

21.'விடும் ' என முடியும் குறள் எழுதுக.

பிரிவு- 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 5×2=10

22. சொற்களின் கூட்டப் பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுக.

1.கல் 2.மக்கள்

23. எண்ணும் பெயர்களைக் கொண்டு தமிழ் எண்களில் எழுதுக.

1. நாற்றிசையும் செல்லாத நாடில்லை 2. ஐந்துசால்பு ஊன்றிய தூண்

24. குறியிட்ட தொகைச்சொற்களை வகைபடுத்துக.

1.'அன்பு செல்வன்' திறன் பேசியின் 'தொடு திரையில்' படித்துக் கொண்டிருந்தார்.

25. கலைச்சொற்கள் தருக:

1. Conversation

2. Discussion

26.தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைச் சொற்களை விரித்து எழுதுக. தொடரில் அமைக்க.

27. பழமொழிகளை நிறைவு செய்க.

1. உப்பிட்டவரை______________ 2.உப்பில்லாப் ______________________

28. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

1.மலை-மாலை. 2.சிலை. -சீலை

பகுதி-III

(மதிப்பெண்:18)

பிரிவு-1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக் 2×3=6

29.புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது.- இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

30. திருந்திய மக்களை மற்ற உயிரினின்றும் பிரித்துக் காட்டுவது எது ?விளக்குக.

31. கீழ்க்காணும் உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்தபெருமகனார்.திருச்சிராப்பள்ளிக்கு

அருகில் அமைந்துள்ள நல்லூரில் "திருவள்ளுவர் தவச்சாலை"ஒன்றை அமைத்து

இருப்பவர்;விழிகளை இழக்க நேரிட்டால் கூட தாய்த்தமிழினை இழுந்து

விடக்கூடாது என்று எண்ணியவர்; அதற்காக, தமிழ் தென்றல் திரு .வி .க போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக்கொண்டவர் தமிழ்த்திரு இரா. இளங்குமரனார்.

அ) இரா. இளங்குமரனார் எவற்றை நிறுவினார்?

ஆ) தமிழ் தென்றல் என்று அழைக்கப்படுபவர் யார்?

இ) இரா .இளங்குமரனார் எவ்வாறு எழுதும் ஆற்றல் பெற்றிருந்தார்?

பிரிவு-2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.

34- ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும். 2×3=6

32. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

33.சோலைக்( பூங்கா) காற்றும் ,மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வது போல ஓர் உரையாடல் அமைக்க:

34. அடிபிறழாமல் எழுதுக:

' தென்னன் மகளே!'.......... எனத் தொடங்கும் பாடல் வரிகள்

பிரிவு-3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் மட்டும் சுருக்கமாக விடையளிக்க: 2×3=6

35. கண்ணே கண்ணுறங்கு! காலையில் நீயெழும்பு! மாமழை பெய்கையிலே!

மாம்பூவே கண்ணுறங்கு! பாடினேன் தாலாட்டு! ஆடி ஆடி ஓய்ந்துறங்கு!- தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.

36. வேலோடு நின்றான் இடுவென் றதுபோலும்

கோலொடு நின்றான் இரவு.-குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.

( அல்லது) தற்குறிப்பேற்ற அணியை விளக்குக.

37. இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்

கெடுப்பார் இலானும் இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

## பகுதி-IV

(மதிப்பெண்கள்:25) .

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 5×5=25

38. அ)மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும்,பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக. (அல்லது)

ஆ) 'காற்றே வா' கவிதையில் பாரதியார் கூறுவன யாவை?

39.அ)மாநில அளவில் நடைபெற்ற "மரம் இயற்கையின் வரம்" என்னும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்து மடல் எழுதுக . (அல்லது)

ஆ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவு பாதுகாப்பு ஆணையருக்கு கடிதம் எழுதுக.

40. படம் உணர்த்தும் கருத்தை நம்முள் ஐந்து தொடர்களில் எழுதுக:

(இயல்-1 வாய்ப்பூட்டு)

41. விடுபட்ட எழுத்துக்களை நிரப்பி அந்த எழுத்துக்களை மட்டும் இணைத்து ஒளிந்துள்ள ஒரு நூலின் பெயரை கண்டுபிடிக்.

1.இ__கு(பறவையிடம் இருப்பது). கு_தி( சிவப்பு நிறத்தில் இருக்கும்)

வா__(மன்னரிடம் இருப்பது). அ_கா (தங்கைக்கு மூத்தவள்)

ம__(அறிவின் மறுபெயர்). பட_(நீரில் செல்வது)

42.அ) இன்சொல் வழி ,தீய சொல் வழி-இதில் நீங்கள் செல்லும் வழி யாது? உங்கள் நண்பர்கள் காட்டும் வழி யாது? (அல்லது)

ஆ) நூலின் ஆசிரியர் பெயர் எழுதுக-பச்சை நிழல்,தவறின்றித் தமிழ் பேசுவோம, குயில்யில் பாட்டு, அதோ அந்த பறவை போல, உலகின் மிகச்சிறிய தவளை

## பகுதி-V

(மதிப்பெண்: 24)

அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடை அளிக்க. 3×8=24

43.அ)தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரை குறிப்புகளை எழுதுக.

( அல்லது)

ஆ)தாவரங்களின் தமிழ் சொல் வளத்தைப் பற்றிய கட்டுரை வடிவில் எழுதுக.

44. அ)அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்த பாட்டினை கோபல்லபுரத்து மக்கள் கதைப் பகுதி கொண்டு விவரிக்க.

ஆ). கற்பனையை இணைத்து நிகழ்வை கதையாக்குதல்

45.அ) திருநாட்டிற்கு புகழைத் தேடித்தந்த பெருமை தகைசால் தமிழன்னையை சாரும்.அவ் அன்னைக்கு பிள்ளைத் தமிழ் பேசி ,சதகம் சமைத்து, பரணி பாடி ,கலம்பகம் கண்டு ,உலாவந்து ,அந்தாதி கூறி, கோவை யாத்து ,இவற்றையெல்லாம் அணியாக பூட்டி அழகு குட்டி அகம் மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள்.-இக்கருத்தை கருவாகக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக. (அல்லது)

ஆ) (மழை நீர் -உயிர் நீர் ) குறிப்பு சட்டம்: முன்னுரை விசும்பின் துளியும் பசும்புல் தலையும்-மழைநீர் சேமிப்பு-காற்று மாசு-பசுமையை காப்போம்-முடிவுரை.